செலவு செய்ய இயலாது என்று அந்த பஞ்சாயத்து தீர்மானம் போட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் அரசுக்கு அனுப்பினல், அது பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தரங்கம்பாடி பகுதியில் இருக்கும் பெரும்பாலான மக்கள் குடிநீருக்காக அவதிப்படும் நிலை இருக்கிறது. அதிலும் குறிப்பாக மீனவர்கள் வாழும் பகுதி, கடலோரப் பகுதியாக இருப்பதால், நீண்டகாலமாக அவர்களுக்கு நல்ல தண்ணீர் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிருர்கள். ஆகவே, அந்தப் பகுதி வரையிலாவது அந்தத் திட்டத்தை விரைவில் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அந்தப் பகுதி எனக்கும் நன்ருகத் தெரியும். அதற்காக கிட்டத்தட்ட 16.58 லட்சம் அளவில் திட்டம் போடப்பட்டு இருக்கிறது. அதை எப்படிச் செய்யலாம் என்பதை பரிசிலித்துக்கொண்டு இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, கிராமங்களில் குடிநீர் கிணறுகள் வெட்டப்படுகின்றன. ஆனல் அவற்றில் எவ்வளவு ஆழத்திற்குப் போனாலும் தண்ணீர் வருவது இல்லை. ஆகவே, குழாய்க் கிணறுகள் போட்டு......................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக்கேள்வி தரங்கம்பாடி பற்றியது. No, that question is disallowed.

வந்தவாசி-சேதராகுப்பம் சாலை.

*319 வினு :—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

வந்தவாசி-சேதராகுப்பம் இடையே உள்ள சாலையில் அரிப்புகளை தடுக்க கற்சுவர்கள் கட்டும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இந்தச் சாலையானது வந்தவாசியிலிருந்து 10 கிராமங்களை இணைக்கும் சாலையாக இருக்கிறது. இடையில் சுகநதி என்ற கால்வாய் வருகிறது. அதனல் அரிப்பு நிறைய ஏற்படுகிறது. ஒன்றியம் அந்தப் பணியை செய்கிற அளவுக்கு பொது நிதி அதிகம் இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் அவர்களே அதைச் செய்து கொள்ள அனுமதி கொடுத்து, உத்தரவு பிறப்பிக்குமா ?

1975 மார்ச் 14]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அந்தச் சாலை 4 கிலோ மீட்டர் தொலைவுள்ள சாலை. அவர்கள் சொன்னது போல் சுகநதி என்ற ஆறு 1·6 கிலோவில் ஓடிக்கொண்டு இருக்கிறது. இதன் குறுக்கே பாலம் கட்ட 1 லட்சம் ரூபாய்க்கு திட்டம் போட்டு இருக்கிறார்கள். அதற்கு மூன்னாலேயே, சக்கிலி என்ற கால்வாய் ஓடிக்கொண்டிருக்கிறது. இதன் குறுக்காக சிறு பாலம் கட்ட ஒரு திட்டம் ரூ. 25,000-ல் போட்டு இருக்கிறோம். அதற்கு டெண்டர் கோரப்பட்டு, இன்னும் சில திங்களில் அது முடிந்து விடும். முதலாவது சொன்ன திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

E. S. I. Hospitals.

* 320 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(*a*) Whether any request has been made by the State Government in recent times to the Centre to increase the ratio of beds from 4 to 7 for every 1,000 workers registered under the Employee's State Insurance Scheme;

(*b*) if so, whether any reply has been received; and

(*c*) the details of the reply so received.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) முதல் (உ) வரை:— தொழிலாளர் அரசுக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், காப்பீடு செய்துகொண்டவர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்படும் வசதிகளுக்காக அங்குள்ள படுக்கைகளின் எண்ணிக்கை வீதாசாரத்தை மீண்டும் பழைய நிலைக்கு அதாவது, காப்பீடு செய்து கொண்ட 1,000 தொழிலாளர்களுக்கு 11 படுக்கைகள் என்ற அளவுக்குக் கொண்டுவருமாறு 1971 பிப்ரவரியில் இந்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டது. நிதிநிலை நெருக்கடி காரணமாக மேற்படி படுக்கைகளின் எண்ணிக்கையை 4 என்பதிலிருந்து 11 ஆக உயர்த்த இயலாது என இந்திய அரசு இந்த அரசுக்குத் தெரிவித்தது. 1,000 பேருக்கு 11 படுக்கைகள் என்பதை 4 படுக்கைகளாகக் குறைப்பதை இனி வரும் நோயாளிகளுக்கு மட்டுமே செயற்படுத்தலாம் என்று 1972 மார்ச்சில் மறுமுறை இந்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்த வேண்டுகோளையும் இந்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

காப்பீடு செய்து கொண்ட ஒவ்வொரு 1,000 பேருக்கும் 4 படுக்கைகள் என்பதைப் படிப்படியாக 7 படுக்கைகளாக உயர்த்த வேண்டுமென்று நீள்நோக்குத் திட்டக்குழு (Perspective Planning Committee) செய்துள்ள பரிவுரைகளை தொழிலாளர் நலக் காப்பீட்டுக் கழகம் அண்மையில் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டது. சாதாரணமாக ஒவ்வொரு 1,000 தொழிலாளருக்கு 4 படுக்கைகள் என்று ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள வரம்பு உயராது என்றும், ஆனால் சிறப்பு நோய்வு